# பொய் புகார் கொடுக்க

## -அ.தி.மு.க. நிர்வ

**நா**டாளுமன்றத் தேர்தல் முடிந்ததுமே தேனி மாவட்ட அ.தி.மு.க.வில் அதிரடி மாற்றங்களைக் கொண்டு வர முடிவு செய்த கட்சி மேலிடம் அதற்காக விசாரணையும் நடத்தியது. 'தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர் தங்க தமிழ்செல்வனுக்கு விசுவாசமாக வேலை செய்யவில்லை' என்பதே சிலர் மீதான புகார். இதையடுத்து போயஸ் தோட்டத்திற்கே வரவழைத்து விசாரித்தார் ஜெயலலிதா. ஆனால் நடவடிக்கை எடுப்பது சில காரணங்களுக்காக அப்போது தள்ளி வைக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இதற்கிடையே சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் நிர்வாகிகள் சிலரை மாற்ற முடிவு செய்த ஜெயலலிதா அதற்கான பட்டியலைத் தருமாறு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்செல்வனுக்கு உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து நீக்கவேண்டிய பட்டியலையும், யாருக்குப் பதவி கொடுக்கலாம் என்பதையும் சிபாரிசு செய்து கட்சித் தலைமைக்குக் கடிதம் கொடுத்திருந்தாராம் தங்க தமிழ் செல்வன்.

ஆனால் அந்தப் பட்டியலை எப்படியோ தெரிந்துகொண்டது அவருக்கு எதிரான கோஷ்டி. பதவி பறிபோய்விடும் என்ற பயத்தில் இருந்த சிலர் முந்திக்கொண்டு மாவட்ட செயலாளர் மீது புகார் சொல்லி போயஸ் தோட்டத்திற்குப் படையெடுத்தார்கள். 'சிலருக்குப் பதவி கொடுக்க மாவட்ட செயலாளர் பணம் வாங்கியிருக்கிறார்' என்றும் அந்தப் புகாரில் சொல்லியிருந்தார்கள். இதையடுத்து அந்தப் புகார்களை ஜெயலலிதா விசாரிக்கச் சொல்ல, அந்தப் பொறுப்பு கோகுல இந்திராவிடம் ஒப்படைக்கப்பட்டது. பிறகு சென்னையில் தலைமைக் கழகத்தில் நடந்தது அந்த விசாரணை. புகார் சொன்னவர்கள் ஒரே மாதிரி விளக்கம் அளிக்க,



தங்க தமிழ் செல்வன்

'உங்க டீமுக்கு தலைவர் யார்?' என்று கேட்டாராம் கோகுல இந்திரா. அதற்கு அவர்கள் சரியான பதில் சொல்லாத நிலையில் விசாரணையை முடித்துக் கொண்டு தலைமைக்கு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார் மகளிர் அணியின் மாநில செயலாளர்.

அதன்பிறகு நடந்தவற்றை நம்மிடம் விளக்கிச் சொன்ன தேனி அ.தி.மு.க முக்கிய வட்டாரம், "மாவட்ட செயலாளர் மீது பெரியகுளம் ஒன்றிய செயலாளர் செல்லமுத்து உள்ளிட்ட சிலர் புகார் கொடுத்திருந்தார்கள். அதுமாதிரி புகார் சொன்னதில் மாவட்ட துணைச் செயலாளர் முருக்கோடை ராமரும் முக்கியமானவர். இவர் அந்தப் பொறுப்பில் இருந்தாலும் கடமலை- வருஷநாடு ஒன்றிய செயலாளர் ஆகும் ஆசையும் இவருக்கு இருக்கிறது. இந்தநிலையில் முருக்கோடை ராமர் கொடுத்த புகார்தான் கட்சி மேலிடத்தையே கொஞ்சம் உறுத்தியது. அதனாலேயே விசாரணையைத் தீவிரமாக்கி உண்மையைக் கண்டறிய அம்மா உத்தரவிட்டார்.

'கடமலைக்குண்டு ஒன்றியச் செயலாளராக கதிரேசனை நியமிக்க தங்க தமிழ் செல்வன் அவரிடம் பணம் வாங்கியிருக்கிறார்' என்பதுதான் முருக்கோடை ராமரின் குற்றச்சாட்டு. இதற்கிடையே ஆண்டிபட்டித் தொகுதியில் முக்குலத்தோர் சமுதாயம்தான் மெஜாரிட்டி. என்றாலும் அவர்களுக்குள்ளேயே கள்ளர், மறவர் என்கிற பாகுபாடு பார்க்கும் தன்மை உண்டு. அதோடு ஒவ்வொரு தேர்தலிலும் அது எதிரொலிப்பதும் அரசியல் வட்டாரத்திற்குத் தெரியும். தற்போது கடமலை ஒன்றிய அ.தி.மு.க. செயலாளராக உள்ள தர்மராஜ் பிறமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்.

**"கட்சித் தலைமை என்ன அறிவிப்பு வெளியிடப் போகிறதோ என்கிற ஒருவித எதிர்பார்ப்பில் இருக்கிறது தேனி மாவட்ட அ.தி.மு.க."**